A· ஞாஞன்னே னன்ஞனே ஞானன் னன்ஞ

B· அன்ன னன்னே னன்ஞனே ஞனே னன்ஞ

A· போடரா சாமி

B· ஞனே னன்ன

A· ஆமட சாமி

B· ஞன னன்னே னன்ஞனே ஞனே னன்ஞ

A· ஏ வெள்ளிவள என்ஞுத்தா நாடுவிட்டு

B· நாடுவிட்டு

A· வெள்ளிவள அடாடா நாடுவிட்டு

B· நாடுவிட்டு

A· சோழதேசம் எஞ்சாமி வருகிறரே

B· வெள்ளிவள அன்ஞன நாடுவிட்டு

A· நாடு விட்டு

B· நாடுவிட்டு

A· ஆமடா சாமி

B· இப்ப சோழராஜா சீமை நல்ல தேடி வாரார்

A· ம் ஆளைக் கண்டா என்ஞுத்தா அன்ன நடை

B· அன்ன நடை

A· ஆள் மறைஞ்சா எஞ்சாமி குதிரை வேகம்

B· அடாடா மேடு கண்டா எஞ்சாமி மெல்ல நடை

A· மெல்ல நடை

B· மெல்ல நடை

A· ஆமடா சாமி

B· பள்ளங்கண்டா எஞ்சாமி பருத்த நடை

about 1 min. and 9 sec.

A· சோழ தேசம் என்னுத்தா தேடியல்லோ

B· தேடியல்லோ

A· வந்தாளே எஞ்சாமி கவண்டகவும்

B· காடான எஞ்சாமி காவேரிட்டு

A· போடாராசாமி

B· காடு வெட்டு

A· ஆமடாசாமி

B· கட்டப்பொன்னி அன்னுன்னு சோலைவெட்டு

A· சோழதேசம் வந்து சேர்ந்தாளோ அங்கனோ..

B· அங்கனோ..

A· யானைமுகப் பிள்ளையார் கோயிலிலே

B· ஆ.

A· ~~[illegible]~~ இறங்கினாளன்னோ..

B· அந்நேரம்...

A· நாம ராஜாவுடைய தெரிசனம் காண்கனுமென்று

B· ஆ.

A· எட்டுப்பேரும் கெல்கையிலிறங்கி கால் முகம்
சுத்தம் செய்து மேலேறிவந்து

B· ஆ.

A· அரசரிடம் சென்றார்கள்...

B· சென்றனை...

பாட்டு:-

about 39 sec.

A. அட்டம் பணியுறோ
அந்த ஆளழமே செய்யுறோ

B. அங்கே பாதம் பணிகுறோ

A. ஆமாமாம் பணியுறோ

B. அங்கே பணிவிடைகள் செய்கிறோ

A. அங்கை அத்திவந்து ஹெண்டனிட்டார்

B. ஆமாமாம் ஹெண்டனிட்டார்

A. அரசருக்கு ஆளியன் கைமுகந்தார்

B. கைமுகந்து நின்னுபட்டானே

A. ஆமாமா கிவண்டகளு

B. அந்த எட்டான எட்டுப்பெரும்

A. கைகட்டி வாய்பொத்தி கட்டழகர்

B. நின்னுபட்டானே..

A. அரசன் பார்த்தார்

B. ஆ.

A. "அப்பா நீங்கள் யார்? வந்த உளர்?"

B. ஆ.

A. "சாமி

B. ஆ.

A. நாங்கள் வெள்ளிவள நாடெங்க.

B. ஆ.

A. காராளர்.

B. ஆ.

A· சாமி பாலகனுங்க.

B· ஆ.

A· எங்கண்ணன் கொளத்தாக் கவுண்டர் வந்து ரொம்ப
வறுமையாகிதுங்.

B· ஆ.

A· தங்களிடத்திலிருப்பதாக கேள்விப்பட்டு

B· ஆகா

A· பஞ்சம் தாங்க முடியாமல் நாங்கள்

B· ஆ.

A· தங்களிடம் வந்தோம் ராஜாவே.

B· ராஜாவே."

A· "ஏப்பா, எட்டெப்பெரும் கொளத்தாக் கவுண்டர்
தம்பியா?"

B· "ஆமாங்.

A· மெய்தானுங் சாமி."

B· ஆ.

A· "அடே! அந்தக் கொளத்தாக் கவுண்டரைக்-
கூப்புடு!"

B· ஆ.

A· உடனே ஆள் போய் "அரசன் அதாவது
ஒரு நிமிஷத்தில் வரச் சொல்லுகிறாரென்று"
சொல்ல

B· ஆ.

A· உடனே ஓடிவந்து நின்றானே...

B· நின்றானே...

A. "கோளத்தாக் கருண்டளோ!

B. ஆ.

A. இந்த எட்டுப்பெருமெ, உன்னுடைய தம்பியா?"

B. ஆ.

A. "சாமை வாங்கவந்தான். மெய்தானுங்க. என்னுடைய தம்பிங்க."

B. "சரி."

A. "எங்க நாட்டில் உணவுப் பொருளுக்கு ரொம்ப பஞ்சமாகி

B. ஆ.

A. நான் வந்து மூணு வருஷமாகுதுங்க.

B. ஆ.

A. என்னைக் காணுமென்று தேடி வந்திருக்கானுங்க."

B. ஆ.

A. "அப்பா நீங்களென்ன வேலை செய்வீங்க?"

B. ஆ.

A. "நாங்களும் தாங்கள் சொன்னவேலையை செய்வனோ."

B. சரி.

A. "நீங்களு நம்முடைய பண்ணையத்தில் இருங்க மாதம் ஒரு மொடா வாங்கிக்கலாமென்று"

B. ஆ.

A. தீர்மானம் செய்தானே.

B. செய்தானே.

A. அப்படியே நல்லதென்று அப்படனே சொன்னார்கள்.

B. சொன்னார்கள்.

பாட்டு:-

1 min. and 10 sec.

A. இந்த இந்த பிறகாளோ அங்கே பிறகாளோ

B. அட பிறகாளோ இனி பிறகாரம்

A. அங்கே நடக்குதே பார் ராஜுடை
அதிகாரோ இனி அதிகாரோ

B. அடா இந்த நல்ல அங்கே
பிறகாளோ இனி பிறகாரம்

A. ஏ பிறகாளோ அங்கே பிறகாளோ

B. அங்கே நடக்குதே பார் அங்கே
ராஜனுட நல்ல கோட்டையிலே

A. அங்கே நாளொருநா நாளொருநா
பொழுதொருநா இனி பொழுதொருநா

B. ஏ அங்கே பொழுதொருநா நல்ல
பொழுதொருநா

A. அங்கே நடக்குதே பார் ராஜுடை
ராஜரீகோ அங்கே ராஜரீகோ

B. அங்கே நாளொருநா அங்கே
பொழுதொருநாள் நல்ல பொழுதொருநா

A. ம் பொழுதொருநா இனி பொழுதொருநா

B. அங்கே நடக்குதே பார் அங்கே
ராஜனுட நல்ல அரண்மனையில்

A. அப்படியே நல்லதென்று அன்புடனே நடக்குதே பார்...

B. நடக்குதே பார்...

A. அங்கெ மாதம் மூன்று மழை பெய்யும் வருஷமொக

B. கல்மாரி..

A. சோழ தேசத்தில்

B. ஆ.

A. அரசாடம்

B. ஆ.

A. அங்கே வாழ்ந்துகொண்டு வருகிறார்கள்..

B. வருகிறார்கள்...

A. அப்ப ஐம்பத்தாறு தேச அரசர்களும் கூடினார்கள்

B. ஆ.

A. கூடி என்ன முடிவு பேசினாங்கன்னு

B. ஆ.

A. "அப்பா இவ்வளவு காலமாக

B. ஆ.

A. ஆசாரிகள் பூமியை உழவடை செய்து வந்தான்.

B. ஆ.

A. இனிமேல் பூமிபாலகர் பிறந்து வந்திருக்கிறார்.

B. ஆ.

A. காராளன் பூமிக்கு உடையவன்.

B. ஆ.

A. நம்முடைய பூமியை உழவடை செய்து

B. ஆ.

A. நம்முருக்கு கந்தாயம் கொடுக்கட்டு.

B. ஆ.

A. ஆசாரிக்கு வேறெ வேலையிருக்குது

B. ஆ.

A· அதை செய்யச் சொல்லலா"மென்று

B· ஆ.

A· ஆசாரியைக் கூப்பிட்டு

B· ஆ.

A· கேட்டுட்டார் அரசர்களு...

B· அரசர்களு...

A· "அப்பா, ஆசாரி!

B· ஆ.

A· உனக்கு வேறெ வேலையிருக்குதே.

B· ஆ.

A· பூமிபாலகர் வந்திருக்கிறார்.

B· ஆ.

A· அவரிய பூமியை ஒப்புக்கொண்டுக்கிட்டு,

B· செரி.

A· நம்மளுக்கு

B· ஆ.

A· கப்பங் கட்டிப் போகட்டு.

B· ஆ.

A· உனக்கு வேறெ வேலையிருக்குதே ஜீவனஞ்செய்யறதுக்கு
வழியிருக்குதப்பா.

B· ஆ.

A· நம்முடைய பூமியை காராளனுக்கு விட்டுவிட
வேண்டு"மென்று

B· ஆ.

A· தீர்மானம் சொன்னார்கள்...

B· சொன்னார்கள்...

A· அப்ப ஆசாரி என்ன செய்தார்

B· ஆ·

A· "சாமி இன்னைக்கித் துலுங்க காரான் வந்து விட்டான்.

B· ஆ·

A· இவ்வளவு காலமாக நாங்க பூமியில்

B· ஆ·

A· உழுவடை செய்து வந்தேன்.

B· ஆ·

A· நான் விடமாட்டே"னென்று

B· ஆ·

A· தந்தையிடஞ் சொல்லுகிறர்...

B· சொல்லுகிறர்...

A· அரசர்கள் மூன்று நாள் கூடி சொல்லிப் பார்த்தார்கள்

B· ஆ·

A· ஒன்றும் முடியவில்லை.

B· இல்லை·

A· ஆமா·

B· ஆ·

A· ஆசாரி கேட்க முடியாதென்றன்.

B· ஆ·

A· அப்போ அரசருக்கு கூடி என்ன — அதாவது அரசருக்கு கூடி

B· ஆ·

A. என்னதான் சொன்னார்கள்...

B. சொன்னார்கள்...

A. " எல்லாம் முடிய என் பெருமாள் மாயவரை வரவழைத்தால்

B. ஆ.

A. அவரு வந்தாத்தே ரண்டுலொன்னு முடியுமென்று

B. ஆ.

A. தெய்வ சபையெ நினைச்சாரே அரசர்களே...

B. அரசர்களே...

A. பரந்தாமா! பூபாலகா! பண்டரிபதி நாதா!

B. ஆ.

A. தாங்கள் பிறந்து ஐந்து வயதிலே தாடகையை சம்மாரஞ்-செய்து, விஸ்வாமித்திரர் யாகத்தை நிறைவேற்றி வைத்தீர்

B. ஆ.

A. அதற்கும் பின்னாலே அகலிகை சாபம் தீர்த்தீர்.

B. ஆ.

A. அதற்கும் பின்னால் மிதிலைக்குச் சென்று ஜானகியை விவாகம் முடித்து வரும்பொழுது பரசுராமன் கர்வத்தை அடக்கி வைத்தீர்.

B. ஆ.

A. அதற்கும் பின்னால் பதினான்கு வருஷம் வனவாசம் சென்று

B. ஆ.

A· சூர்ப்பநகையை மானபங்கம் செய்தினுல்

B· ஆ.

A· ராவணன்

B· ஆ.

A· தெற்கு இலங்கைக்குச் சென்று விட்டான்.

B· ஆ.

A· அசோகவனத்தில் கொண்டு அம்மனை வைத்துவிட்டான்.

B· ஆ.

A· அதனல் நாங்கள் அநேகவிதமான கஷ்டத்தை அடைந்து,

B· ஆ.

A· கிஷ்கிந்தாபுரத்திற்குச் சென்று வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு மகுடம் சூட்டி வைத்தீர்.

B· ஆ.

A· அதற்கு பின்னல் அநுமாரால் தூது சென்று இலங்கையை கண்டுபிடித்து

B· ஆ.

A· எழுபது வெள்ள வானரப் படையும் கூட்டிச் சென்று,

B· ஆ.

பாட்டு:-

A· தென்னிலங்கை தென்னிலங்கை
ராவணனே அங்கு ராவணனே

B· அங்கே ராவணனே நல்ல ராவணனே

A· ஏ சென்னிமுடி சென்னிமுடி
பத்தும் கொய்தாய் அங்கே பார்த்தாமே

X

B. அடா தென்னிலங்கை தென்னிலங்கை
ராவணனே நல்ல ராவணனே

A. ம் ராவணனே அங்கு ராவணனே

B. அங்கே சென்னிமுடி சென்னிமுடி
பத்தும் கொய்தார் நல்ல பத்தும் கொய்தார்

A. ஏ அரக்கர்களை அரக்கர்களை
வேரறுத்த அங்கு வேரறுத்த

B. அங்கே வேரறுத்த நல்ல வேரறுத்த

A. ஏ அரிராமா எங்களிடம்
வரவேண்டும் ஐயோ பரந்தாமா

B. அங்கே அரக்கர்களை அரக்கர்களை
வேரறுத்த நல்ல வேரறுத்த

A. அங்கே வருந்தியாட்டார்
அங்கே அரக்கர்களும்

B. அங்கே அரிராமா இதுசமயம் வரவேணும்
நல்ல வரவேணும் /

about 1 min. and 16 sec.

A. இரண்யனை சம்மாரம் பண்ணி முடித்தவராம்...

B. முடித்தவராம்...

A. எங்களுடைய வழக்கு தெழியும்படியாக

B. ஆ.

A. அருள் செய்யவேண்டும் பரந்தாமனென்று

B. ஆ.

A. மாயவரை வேண்டினார்கள்

B. வேண்டினார்கள்

A. பரந்தாமன், பூபாலகன்

B. ஆ.

A. ஆறுமாசத்திற்கு பால்கடலிலிருப்பார்.

B. ஆ.

A. ஆறுமாசத்துக்கு வில்பூக்காட்டிலே தெய்வ சபையிலே

B. ஆ.

A. வண்டுகளும், தும்பிகளும்

B. ஆ.

A. வண்ண லட்சம் பட்சிகளும், பூமரம் வாசத்தை எடுக்கறதுக்காக

B. ஆ.

A. அங்கு அலங்காரமான காட்சி விட்டவும்,

B. ஆ.

A. மல்லிகை, முல்லை, செண்பகம் என்று சொல்லக் கூடிய புட்ப மலர்கள் மலர்ந்திருக்கின்றன.

B. ஆ.

A. அந்த வாசத்துக்கு அங்கை ஆறுமாசத்திற்கு இருப்பார்.

B. ஆ.

A. அதாவது சோழதேசத்தில் அரசர் நம்மை அழைக்கிறாரென்று

B. ஆ.

பாட்டு:-

A. கெருடன் மேலே என்னுத்தர
சீனிவைத்தார்

B. சீனி வைத்து

A. கெடுடன் மேல் எங்சாமி சீனி வைத்தார்

B. கெடுடன் மேலே எங்சாமி சீனி வைத்து

A. சீனி வைத்து

B. சீனி வைத்து

A. ஆமடா சாமி

B. அந்திரமா என் பெருமாள் வருகிறரோ.

A. ஏ சோழ தேசம் எண்ணுந்தா தேடியல்லோ

B. ஆமா ஆமா.

A. மாயவரும் எங்சாமி வழி நடந்தார்

B. அங்கே சுந்தரக மாயவனும் வழிவெடுத்து

A. ஆமா ஆமா.

B. வழிவெடுத்து

A. வழிவெடுத்து

B. அந்திரமா என் பெருமாள் வருகிறோ

A. ம் அங்கே சோழ தேசம்
எண்ணுந்தா தேடியல்லோ

about 49 sec.

B. தேடியல்ல

A. சேமமா எங்சாமி தேடியல்லோ

B. தேடியல்ல

A. மையமா மையமா பறக்கிறோ

B. சோழ தேசம் அண்ணுங்கே தேடியல்ல

A. தேடியல்ல

B. தேடியல்லி

A· நேரமல்ல

B· மையமாக எம்பெருமான் வருகிறோ

A· சோழ தேசம் நேர அச்சினமா வழிநடந்தார்...

B· வழிநடந்தார்...

A· எம்பெருமான் ~~[illegible]~~ மாயவர் வந்து

B· ஆ.

A· பாம்பின் பேரில் ஆசனம்போட்டு அமர்ந்தார்
பருங்கொலுவா...

B· பருங்கொலுவா...

A· அரசர்களும் ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும்,

B· ஆ.

A· மற்றுமுள்ள ஜனங்களும்

B· ஆ.

A· மாயவரை வணங்கினார்கள்.

B· வணங்கினார்கள்.

A· "ராஜாக்களே!

B· ஆ.

A· எதற்காக என்னை வரவழைத்தீர்?"

B· ஆ.

A· என்று மாயவரும் கேட்டாரோ...

B· கேட்டாரோ...

A· "சுவாமி!

B· ஆ.

A· எங்கள் நாட்டில் இவ்வளவு காலமாக

B· ஆ.

A· ஆசாரி பூமியை உழுவடை செய்து வந்தான்.

B· ஆ.

A· வெள்ளிவள நாட்டிலே,

B· ஆ.

A· அந்த ஈஸ்வரியுட ஒரு அருளாலே

B· ஆ.

A· ஒம்பது திக்கு பாலகர்கள் மேழிச் செல்வத்தில் பிறந்து,

B· ஆ.

A· காராளர் வந்து விட்டார்.

B· ஆ.

A· அந்தப் பூமி பாலகன் வந்தானாலே

B· ஆ.

A· அப்பா ஆசாரியைக் கூப்பிட்டுக் கேட்டோம்.

B· ஆ.

A· 'இனிமேல் பூமியை அந்தக் காராளனுக்கு விட்டு விடு

B· ஆ.

A· உனக்கு வேறெ வேலையிருக்குதின்னு சொன்னோம்.

B· ஆ.

A· 'ஒருபோதும் கேட்கமாண்டேனென்று

B· ஆ.

A· 'பூமியை நான் விடமுடியாதின்னு

B· ஆ.

A. நரைத்து வருகிறோ—

B. வருகிறோ—

A. தங்களை வரவழைத்தால் இதற்கு வயணம்தெரியு
மென்று

B. ஆ.

A. வரவழைச்சேன் பாந்தாமா..."

B. பாந்தாமா—

A. "சரி, நல்லது. அப்பா, அசாமி!

B. ஆ.

A. இனிமேல் காராளர் பூமிபாலகர்வந்து

B. ஆ.

A. பூமிக்கு உடையவர்கள் வந்திட்டார்கள்.

B. ஆ.

A. அவர்கள் உழவடை செய்து

B. ஆ.

A. அரசருக்குக் கப்பம் கட்டுகு.

B. ஆ.

A. உனக்கு வேறை வேலையிருக்குதப்பா.

B. ஆ.

A. உன்னுடைய பூமியை நீ உட்டுடு (விட்டுடு)" அப்படியேன்-
னுரு

B. ஆ.

A. "சாமி! இவ்வளவு காலமாக காராளன் கிடையாதுங்க.

B. ஆ.

A. இன்னைக்கி புதுசா வந்ததுனால் நாங்கள் விட முடியாதென்று

B. ஆ.

A. தந்தமுந் சொல்லுகிறா-

B. சொல்லுகிறா...

A. "அப்பா அசாரி நான் ஒரு உபாயஞ் சொல்லுகிறேன்.

B. ஆ.

A. அதுனால்

B. ஆ.

A. நீ யதைக் கேள்ப்பயா?" "சாமி கேள்க்கிறேன்"

A. " இப்ப இந்த பூவை பாலகனைக் கொண்டு போயி பூமிக்கெங் கீழே நிறுத்தி.

B. ஆ.

A. தங்கக் கிரீடம் வெச்சு.

B. ஆ.

A. தங்க மிஞ்சி போட்டு.

B. ஆ.

A. நாலுகால் பீடத்தின் மேல்

B. ஆ.

A. பதினெட்டு அபிஷேகம் நடத்தி நான் மேலே எழுப்பச் செய்கிறேன்.

B. ஆ.

A. ஒரு வெட்டுலே அவடை சிரசை நீ வெட்டிப் போட்டயா

B. ஆ.

A. இந்தப்பூமியை நீ ஒப்புக் கொண்டுக்க.

B. சொ.

A. வெட்ட முடிஞ்சயா

B. ஆ.

A. நான் சொன்னபிறகாரம் நீ கேட்டு, நீ
வாங்கி சாப்பிட்டுக்கொ" அப்படின்னுடு.

B. ஆ.

A. "நல்லது சாமி"யென்றோ.

B. சாமியென்றோ—

A. அதும்பரயாக என் பெருமாள் மாயவர்

B. ஆ.

A. பூமா தேவியை வரவழைத்து.

B. ஆ.

A. பூமியைக் கொஞ்சம் பகிர்ந்து விடச் சொல்ல.

B. ஆ

A. அந்த எல்லாருக்கு மூத்தவம் கொளத்தாக்
கெண்டரெச் கொண்டு கீழே திருத்தி.

B. ஆ.

A. தங்கக் கிரீடம் வெச்சு, தங்கமெத்தப்போட்டு.

B. ஆ.

A. நாலுகால் பீடம் வெச்சு, பதினெட்டு அம்மைகும்
நடத்தி.

B. ஆ.

A. மேலெயும் எழுப்புறாரே...

B. எழுப்புறாரே...

A. ஆசாரியவர்கள் தயாரா கத்தியெ வைச்சுக் கொண்டு நிக்கிறார்கள்.

B. ஆ.

A. 'மேலெ வந்தா ஒரே வெட்டாக வெட்டோணு' அப்பிடீன்னிருக்காரு.

B. ஆ.

A. மேலெ வரும்போது எம்பெருமான் மாயவர்

B. ஆ.

A. வெண்ணீறை வீசி விட்டார்...

B. வீசி விட்டார்...

A. அவர்கள் கையெடுக்க முடியாமெ, மேலெ தூக்க முடியாமெ அப்படியே நின்னு விட்டார்.

B. ஆ.

A. உடனே

B. ஆ.

A. மாமன்னு பூமியுட்டு மேலெ வந்து ~~[illegible]~~ சிம்மாசனத்திலுட்கார்ந்தார் கௌந்தாக் கவுண்டர்.

B. ஆ.

A. "அப்பா, ஆசாரி!